செ.வெ.எண் : 36/ ஆகஸ்ட்	நாள் : 18.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## சிறு,குறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்கு எரிசக்தி மற்றும் ஆற்றல் சிக்கன மேம்பாடு குறித்த தணிக்கைக்கு 50 சதவீத மானியம் வழங்கும் திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்

### மாவட்ட தொழில்மையத்தின் சார்பாக வருகின்ற 22.08.2017 அன்று நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு, தொழில் வணிகத்துறையின் மூலம், சிறு,குறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்கு மின்சக்தி, எரிசக்தி மற்றும் ஆற்றல் மூலங்கள் ஆகியவற்றிற்கான சிக்கன தணிக்கைக்கு 50 சதவீத மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட தொழில்மையத்தின் சார்பாக இதுகுறித்த விழிப்புணர்வு முகாம் வருகின்ற 22.08.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் பொருட்களின் உற்பத்திக்கு எரிபொருள் மற்றும் ஆற்றல் மூலங்கள் (பெட்ரோல், டீசல், மின்சாரம், மனித வளம் மற்றும் நிலக்கரி) அவசியமாகிறது. தேவையற்ற பயன்பாடு, தொழில் நுட்ப குறைபாடு மற்றும் தரமற்ற, காலாவதியான இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விரயத்தை தவிர்ப்பது, எரிபொருள் மற்றும் ஆற்றலைச் சேமிப்பது என்பது தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது.

ஆற்றல் மூலங்களின் செயல்முறைகள், இயந்திரங்களின் திறனை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / அதிகாரி மூலம் தணிக்கை செய்து, தணிக்கையின் பரிந்துரைகளை உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் முறையாக செயல்படுத்துவது, தொழில் நிறுவனங்களுக்கும், நன்மை பயக்கும் விதமாக இருக்கும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்களிலும், தனியார் மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களிலும் பொருட்களின் உற்பத்திக்கு செலவிடப்படும் மின்சக்தி, எரிசக்தி என ஆற்றல் மூலங்கள் (பெட்ரோல், டீசல், மின்சாரம், மனித வளம் மற்றும் நிலக்கரி) பல்வேறு நிலைகளில் முறையாக செலவிடப்படுகிறதா என்பதைத் தணிக்கை செய்து ஆற்றல் சிக்கனத்தை மேம்படுத்தும் விதத்தில் தமிழக அரசின் 2017-2018ம் நிதி நிலை அறிக்கையில் MSME நிறுவனங்கள் தமது ஆற்றல் சிக்கனத்தை மேம்படுத்துவதற்கான தணிக்கையினை மேற்கொள்ளவும், தணிக்கை பரிந்துரைகளை செயலாக்கவும் தமிழக அரசின் மானியங்கள் அறிவிக்கப்பட்டு PEACE - Promotion of Energy Audit and Conservation of Energy என்ற திட்டம் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் எரிபொருள் மற்றும் ஆற்றல் சிக்கன மேம்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி அம்முகாம்களில் கலந்து கொள்ளும் தொழில் நிறுவனங்களில் சில நிறுவனங்களை தேர்வு செய்து தேசிய உற்பத்தி கவுன்சில் (National Productivity Council) நிறுவனம் வழியாக பயிற்சி வழங்கி பயிற்சியினைத் தொடர்ந்து அதில் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கைக்கான கட்டணத்தில் மானியம் மற்றும் தணிக்கை பரிந்துரையினை செயல்படுத்தும் செலவினங்களுக்கான மானியம் வழங்கப்பட உள்ளது.

ஆற்றல் தணிக்கை செய்ய விரும்பும் ஒவ்வொரு தொழில் நிறுவனத்திற்கும் தணிக்கைக்கான செலவில் 50% அதிகபட்சமாக ரூ.75,000/- அரசே திருப்பி செலுத்துகிறது. தணிக்கையின் பரிந்துரைகளை செயல்படுத்தும் நிறுவனங்கள், புதிய இயந்திரங்கள் வாங்குவது / புதிய தொழில் நுட்பங்களை செயல்படுத்துவது / பழைய இயந்திரத்தில் உரிய மாற்றம் செய்து ஆற்றலை சேமிப்பது போன்ற செயல்பாடுகளுக்கு 25% மான்யம் அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் அரசு வழங்குகிறது.

ஆற்றல் தணிக்கை செய்து, அரசு வழங்கும் இதர சலுகைகளை பயன்படுத்திக் கொள்ள விரும்பும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்ட தொழில் மையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட தொழில் மையம், அலுவலக தொலைபேசி எண்.04567 230497.

இத்திட்டம் (PEACE) குறித்து 22.08.2017 அன்று காலை 9.30 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள விழிப்புணர்வு முகாமில் MSME நிறுவனங்கள், வர்த்தகர்கள், தொழில் ஆர்வலர்கள், மற்றும் தொழில் முனைவோர் கலந்து கொண்டு பயனடைய வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**